[கிடைத்துள்ள இந்த விடுமுறையை பயனுள்ள முறையில் கழித்திடுவோம்]

தமிழ் இலக்கிய நயம்

மாதிரி பரீட்சை வினாத்தாள்களின் தொகுப்பு

(வினா விடையுடன் கூடியது)

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கானது

இரா. நிஷாந்தன்
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் ம.வி
(கிளிநொச்சி கல்வி வலயம்)

www.lkedu.lk



LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium
தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

க. பொ. த சாதாரண தரப் பரீட்சை – 2020
மாதிரி வினாத்தாள் – 01
தமிழ் இலக்கிய நயம் – 48T

பகுதி – I

01. I தொடக்கம் 5 வரையான வினாக்களிற்கு சுருக்கமான விடை எழுதுக.

I . தார்குலாம் அலங்கல் மார்பன் தாயாரை நினைந்து நைந்தான்..

அ. இங்கு தார்குலாம் அலங்கல் மார்பன் யார்?

இ. இங்கு தாயார் என விளிக்கப்படுவது யார்?

II. பாலைப் பண் வழிப்பறிக் கொள்ளையர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களை கீழே போட்டுவிடச் செய்யும்..

அ. இக் கூற்றினை காப்பியம் செய்யும் நூல் எது?

ஆ. மேற்படி நூலின் ஆசிரியர் யார்?

III. கலகமே செய்யும் கண் இதுவாமென
மலரம்பைந்தையும் வைத்து வணங்கினான்..

அ. வணங்கினான் எனச் சுட்டப்படுபவன் யார்?

ஆ. மலரம்பு ஐந்தும் எவை?

IV. குளிர் காற்றும் குமைந்த மேகத்திட்டுக்களும்
மழை வர்சிப்புக்கு குறியீடு காட்டின..

அ. இக் கூற்று இடம் பெறும் சிறுகதை யாது?

ஆ. மழை வருவதற்கான அறிகுறிகளாக காட்டப்படுபவை எவை?

V. எங்கள் வீட்டுச் சேவலுக்கும் பேட்டுக்கும் எப்போது சண்டை ஆரம்பித்தது என்று எனக்கு ஞாபகமில்லை..

அ. சேவல்
ஆ. பேடு

எனும் குறியீடுகளால் சுட்டப்படுபவர்கள்?

02. கீழ்க்காணும் பாடற் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா இதில்
அங்கமெல்லாம் மிகப் பொங்கி வழிந்திடும்
அன்பு மிகக் கலந்ததையா

கொட்டிய உப்பு கசப்பென்றாலும் உள்
கூடியினிக்குதையா இது
விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட
விண்ணின் அமுதையா

சொன்னபடி நடவாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்ததையா இது
சின்னஞ் சிறுகுழந்தை அளைந்தது
தெய்வ அமுதமையா

ஆகக் கரிந்து பொரிந்தது என்றாலுமே
அன்பு மணக்குதையா இது
வேக வைக்காதது என்றாலும் எனக்கொரு
விந்தை உருசியையா

ஊது குழல் சத்தம் கேட்டு அவதிப்பட்டு
ஓடி வருகையிலே இது
பாதி வழி வந்து தாமரைக் கை தந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினில் சுற்றிய
கட்டுப் பொதி இதையா இதைக்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல்லாம் ஒரு
சோதி மிளிருதையா

i. **தலைவி மீது தலைவன் கொண்ட பரஸ்பர அன்பு எவ்வாறு புலப்படுகின்றது?**

ii. **தலைவி சமைத்த உணவை தலைவன் எவ்வாறெல்லாம் புகழ்ந்துரைக்கின்றான்?**

iii. **வீட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட வின்னின் அமுதையா.. எனும் தொடரின் வெளிப்படும் நயத்தினை விளக்குக?**

iv. **பாடலில் புலப்படும் உவமையணி ஒன்றினை எடுத்துக் காட்டி விளக்குக?**

v. **மனைவியின் சமையல் தாமதமாகி விட்டது என்பது பாடலில் வெளிப்படுமாற்றினை எடுத்துரைக்க?**

<u>பகுதி – II</u>

03. கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

ஹைக்கூ என்பதன் அர்த்தம் என்ற கேள்விக்கு சேம்பர்ஸ் அகராதி 5,7,5 அசைகள் கொண்ட ஜப்பானிய கவிதை என்று பதிலுரைக்கின்றது. எனினும் இந்த விளக்கத்தையும் தாண்டி ஹைக்கூ ஒரு அனுபவப் பகிர்வு, வியப்பில் ஆழ்த்தும் வீச்சு, இரசனையூட்டும் அழகு, சிந்தனையெழுப்பும் அலை, உணர்ச்சியை ஏற்றும் தூண்டியாக அமையும் ஆற்றல் மிக்க வடிவம். ஒரு மின்னல் அல்லது மின்மினி. அனுபவத்தையும், உணர்வையும் பிறருக்குத் தர முயல்வது தான் ஹைக்கூ. உண்மையில் கலை, இலக்கியம் அனைத்தினதும் நோக்கும் இது தான். கவிஞனோ, கலைஞனோ, ஓவியனோ, தனக்குக் கிடைக்கும் அனுபவத்தை அப்படியே உணர்வு இழை அறுந்திடாதவாறு தன் சிருஷ்டியைப் பின்னி வாசகருக்குப் பரிசளிக்கின்றான்.

கணப்பொழுதின் அனுபவமாக இருப்பினும் அது கிளர்த்தும் சிந்தனைகளும், சம்பாசணைகளும், எதிர்வினைகளும், கேள்விகளும் அதிகம் வாசக மனசுக்குள் அலை எழுப்பும். அதனால் தான் ஹைக்கூ காந்தம் போல் இழுக்கும் மொழிநடையையும், பிரபஞ்சத்தின் அந்தரங்கங்களையும் காட்சிப்படுத்தும் தத்துவப் பார்வையையும் கொண்டுள்ளது எனலாம். ஹைக்கூ பதின் நான்காம் நூற்றாண்டில் தோற்றம் கண்டது. மோரிடாகே, சோகன் என்பவர்கள் தான் ஹைக்கூவின் முன்னோடிகளாவர். எனினும் பாஷோ தான் மிகப் பெரும் ஹைக்கூ கவிஞராக பேசப்பட்டவர். ஹைக்கூவிற்கு முழு வடிவம் கொடுத்து அதில் செழுமையைப் பாய்ச்சியவர் பாஷோ. கற்பனை வாதத்தில் மிதந்த ஹைக்கூவை அன்றாட வாழ்வின் யதார்த்த நிலமைக்கு இட்டுச் சென்றவரும் பாஷோ தான்.

i. **ஹைக்கூவின் இயல்புகளாக காட்டப்படுபவை யாவை?**

ii. **ஹைக்கூவின் முன்னோடிகளாக கூறப்படுபவர்கள் யாவர்?**

iii. **பாஷோ பற்றி உரைப்பகுதியில் வெளிப்படுவனவற்றை எடுத்துரைக்க ?**

iv. **ஹைக்கூவின் நோக்கம் யாதெனக் கூறப்படுகின்றது?**

v. **உரைப்பகுதியில் வெளிப்படும் உவமையணியை எடுத்துக் காட்டுக?**

பகுதி – III

❁ எவையெனும் விரும்பிய இரண்டு வினாக்களிற்கு விடை எழுதுக

04. **தெளிவு** சிறுகதையில்,

அ. பாரூக் நானாவின் வறுமை/தபால்காரனின் ஏழ்மை
ஆ. கிராமம் பற்றிய வர்ணிப்பு என்பன

புலப்படுமாற்றினை எடுத்துரைக்குக.

05. **சிலப்பதிகாரம்** கானல் வரியில்,

அ. சோழ மன்னனின் பெருமை
ஆ. காவிரியின் வளம்

என்பன குறித்து விபரிக்குக.

06. திருக்குறள் **நலம் புனைந்து உரைத்தல்** பகுதியில் தலைவியின் அழகை,

அ. மலர்களை ஒப்பிட்டு
ஆ. மதியினை ஒப்பிட்டு

புனைந்துரைக்கப்படுமாற்றினை எடுத்துரைக்குக

07. **பெருமரமாகிப் போனதொரு வாழ்வு** எனும் கட்டுரையில்,

அ.பாலுமகேந்திராவின் ஆளுமைகள்
ஆ. சினிமாத் துறையில் பாலுமகேந்திரா ஏற்படுத்திய மாற்றங்கள்

என்பன குறித்து விபரிக்குக

✍ வினா இலக்கம் - 01 இன் விடைகள்

I. **அ. இலக்குவனன்**
ஆ. கோசலை, சுமித்திரை, கைகேயி

II. **அ. பொருநராற்றுப்படை**
ஆ. முடத்தாமக்கண்ணியார்

III. **அ. மன்மதன்**
ஆ. முல்லை, அசோகு, தாமரை, நீலோற்பவம், மா

IV. **அ. தெளிவு**
ஆ. குளிர்க்காற்று, குமைந்த மேகத்திட்டுக்கள்

V. **அ. அப்பா**
ஆ. அம்மா

www.lkedu.lk

✍ வினா இலக்கம் - 02 இன் விடைகள்

I. குறைகளையும் நிறைவாகக் காணுகின்ற தலைவனது மன வெளிப்பாடு தலைவியின் மீது கொண்ட அன்பினை எடுத்துரைக்கின்றது.

- உணவில் குறையிருப்பினும் அதை பலவாறாக புகழ்ந்துரைத்தல்
- விண்ணின் அமுதம், விந்தை உருசி, தெய்வ அமுதம் எனவாறு கூறுதல்
- சின்னஞ்சிறு குழந்தை போல் தன் மனைவியைக் கருதி அன்பு காட்டுதல்
- அன்புக் கயிற்றினால் கட்டிய உணவுப் பொதி எனக் கூறுவதன் ஊடாக தலைவி மீது கொண்ட அன்பு புலப்படுகின்றது
- வீட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்டது, பாதி வழியில் ஓடி வந்து உணவு கொடுத்தது எனத் தலைவன் கூறுவதும் அவனது அன்பினை காட்டி நிற்கின்றது.

II. விண்ணின் அமுதம், பச்சை அமுதம், தெய்வ அமுதம், விந்தை ருசியானது மேலும் தங்கக் வளைக் கைகள் தொட்டுச் சமைத்த உணவு, அன்புக் கயிற்றினில் கட்டிய உணவு, உப்புத் தன்மை அதிகமாக இருப்பினும் விந்தையான சுவை மிக்க உணவு, கண்ணீர் பட்ட விண்ணின் அமுதம், சின்னஞ்சிறு குழந்தை அளைந்த தெய்வ அமுதம் எனப் பலவாறு புகழ்ந்துரைக்கின்றான்

III. தலைவன் தலைவியை பிரிந்து செல்கின்றான். இதனால் தலைவியின் கண்களில் இருந்து கண்ணீர் வெளிப்படுகின்றது. அக் கண்ணீர் துளிகள் அவள் சமைத்த உணவில் சேர்ந்து விடுகின்றது. இதனால் உணவில் உப்புத் தன்மை அதிகமாகி விட்டது. ஆனால் கண்ணீர்த் துளிகள் பட்டாலும் அந்த உணவு விண்ணின் அமுதம் என்று சொல்லத்தக்க வகையில் சுவையாக இருப்பதாக தலைவன் கூறுகின்றான். இது உயர்வு நவிற்சியணியின் வெளிப்பாடாகும்.

IV. பாதி வழி வந்து தாமரைக் கை தந்த பச்சை அமுதமைய்யா.. எனும் பாடல் வரியில் உவமையணி புலப்படுகின்றது. தலைவியின் கைகள் தாமரை மலர் போன்று உள்ளது என பயிலப்படுகின்றது.

உவமானம் – தாமரை மலர்
உவமேயம் – தலைவியின் கைகள்
பொதுத்தன்மை – மென்மை, அழகு

V. ஆம். மனைவியின் சமையல் தாமதமாகி விட்டது. இதனை ஊது குழல் சத்தம் கேட்டு அவதிப்பட்டு ஓடி வருகையில் பாதி வழி வந்து.. எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன. புகையிரதத்திற்கு நேரம் ஆகி விடவே தலைவன் புறப்பட்டு விடுகின்றான். தலைவி அவன் செல்லும் வழியில் ஓடி வந்து உணவினை கொடுக்கின்றாள். இதன் மூலம் அவளது சமையல் தாமதமாகி விட்டது என்பது புலப்படுகின்றது.

✍ வினா இலக்கம் - 03 இன் விடைகள்

.i. ஒரு அனுபவப் பகிர்வு, வியப்பில் ஆழ்த்தும் வீச்சு, இரசனையூட்டும் அழகு, சிந்தனையெழுப்பும் அலை, உணர்ச்சியை ஏற்றும் தூண்டி

ii. மோரிடாகோ, சோகன்

iii. ஹைக்கூவிற்கு முழுமையான வடிவம் கொடுத்து அதில் செழுமையைப் பாய்ச்சியவர், கற்பனை வாதத்தில் மிதந்த ஹைக்கூவை அன்றாட வாழ்வின் யாதார்த்த நிலைக்கு இட்டுச் சென்றவர்.

iv. அனுபவத்தையும் உணர்வையும், பிறருக்குத் தர முயல்வது ஹைக்கூவாகும்.

v. காந்தம் போல் இழுக்கும் மொழிநடை என்பது உவமையணியின் வெளிப்பாடாகும்.

✍ வினா இலக்கம் - 04 இன் விடைகள்

அ. பாரூக் நானாவின் ஏழ்மை

→ பழைய சைக்கிளில் பயணித்து தபால்களை விநியோகம் செய்தல்

→ உச்சி வெய்யிலில் உடல் வெப்பத்தால் சூடேறுதல்

→ உடலை வியர்வை நனைத்திட தபால்க் கட்டுக்களுடன் பயணித்தல்

→ நேரத்திற்கு உணவு உண்ண முடியாத நிலை– பசி மிகுதியால் நிஷ்தாரிடம் தன் நிலையை உரைத்துப் பணம் கேட்டல்

→ எதிலுமே பிடிப்பில்லாத ஒருவித மலட்டுச் சோகம் குடி கொண்டிருத்தல்

→ அவனது ஏழ்மை காரணமாக குடும்பத்தில் விரிசல் விழுதல், முக முறிவுகள் ஏற்படுதல்

→ உறவினர் வீட்டு கலியாணத்திற்கு போவதற்கு ஆயிரம் ரூபாய் வேண்டும், இப்ப வசதியில்லை. கடன் கேட்கவும் யாருமில்லை என ஆதங்கம் கொள்ளுதல்

→ பிறருடைய கடிதத்தைப் பிரித்து அதனுள் இருக்கும் பணத்தை எடுக்க முடிவு செய்தல் நானாவின் ஏழ்மையில் உச்ச கட்ட வெளிப்பாடாகும்.

ஆ. கிராமம் பற்றிய வர்ணிப்பு

→ மரங்கள் சூழ்ந்துள்ள இயற்கையான கிராமம்

→ செம் மண் நிறைந்த பாதைகளில் மேடு, பள்ளங்கள் காணப்படுதல்

→ விழுது பரப்பி நிற்கும் ஆலமரம் காணப்படுதல்

→ குச்சில் வீடுகள் காணப்படுதல் அத்தோடு தேனீர்க் கடைகள் உள்ளமை

→ மாணவர்கள் கல்வி கற்கும் கலவன் பாடசாலை காணப்படுதல்

→ இறை வழிபாட்டிற்கான பள்ளி வாசல் காணப்படல்

→ கால்நடைகள் உலாவித் திரிதல்

→ கடிதத் தொடர்புகள் கொண்ட மக்கள் வாழுதல்

→ பிரயாணத்திற்காக சைக்கிள் பயன்படுத்துதல்

✍ வினா இலக்கம் - 05 இன் விடைகள்

அ. சோழ மன்னனின் சிறப்பு

→ மாலை அணிந்த முழுமதி போன்றவன்

→ வெண்கொற்றக் குடையினை உடையவன்

→ நிலைத்த புகழ் எனும் மாலை அணிந்தவன்

→ சோழ நாட்டினை ஆட்சி செய்தவன்

→ நீதி தவறாது செங்கோல் செலுத்தி ஆட்சி செய்பவன்

→ போர் ஒழுக்கத்தினை உடையவன்

→ வளையாத செங்கோலை கொண்டிருப்பவன்

→ பகைவர்க்கு அச்சத்தை தருகின்ற வேலைக் கொண்டிருப்பவன்

→ உயிர்களைப் பாதுகாக்கும் ஆணைச் சக்கரத்தை உடையவன்

→ சூரிய குலத்தில் பிறந்தவன்

→ நடு நிலைமை தவறாத ஆட்சித் தன்மை உடையவன்

ஆ. காவேரியின் வளம் அல்லது சிறப்பு

→ புதுப்புனலாக பெருகி வந்து உழவர்களின் மகிழ்ச்சிக்கு காரணமாக அமைந்தமை

→ கரைகளையும், வரம்புகளையும் உடைத்துக் சென்று பாய்கின்ற தன்மையைக் கொண்டிருத்தல்

→ இரு பக்கமும் வண்டுகள் ஒலிக்க அழகிய பூவாகிய ஆடை போர்த்து கரிய கயல் போன்ற கண்களை விழித்து அசைந்து நடத்தல்

→ சோழ நாட்டினை மகவாகக் கருதி அதை வளர்க்கும் தாயாக விளங்குதல்

→ ஊழிக்கால முடிவு வரை சோழ நாட்டினை தன் நீர்வளத்தினால் பாதுகாத்தல்

✍ வினா இலக்கம் - 06 இன் விடைகள்

அ. மலர்களை ஒப்பிட்டு தலைவியின் நலனை புகழ்ந்துரைத்தல்

☯ அனிச்சம் பூவுடன் ஒப்பிட்டு தலைவியின் அழகினை புகழ்ந்துரைத்தல். மென்மையான தன்மை கொண்டிருப்பதால் பூக்கள் அனைத்திலும் சிறந்து விளங்குவது அனிச்சம் பூ. ஆயினும் தன்னால் விரும்பப்படும் தலைவி அவ் பூவை காட்டிலும் மென்மையானவள் என தலைவன் கூறுகிறான்.

" அனிச்சமே யாம் வீழ்பவள் நின்னினும் மென்னீரள்..

☯ மேலும் தலைவியின் கண்கள் பலராலும் காணப்பெறும் பூக்களாகிய தாமரை, குவளை, நீலம் என்பவற்றை ஒத்துருக்கின்றன எனவும் தலைவன் கூறுகிறான்.

" இவள்கண் பலர் காணும் பூ ஒக்கும்..

☯ குவளை மலர்கள் காணும் இயல்பினை கொண்டிருந்தால் தன் தலைவியின் கண் அழகிற்கு தாம் ஒப்பாக மாட்டோம் எனக் கருதி அவை நாணமடையுமாம் எனக் கூறுதல்

" காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்..

☯ இது மட்டுமன்றி, அனிச்சம் பூவினை காம்பு நீக்காமல் தலைவி தன் கூந்தலில் சூடினால் அதன் பாரம் தாங்காது அவளது இடையானது ஒடித்துவிடும் என தலைவன் மிகையாக உரைக்கின்றான்.

" அனிச்சம் பூக் கால்களையான் பெய்தாள் நுசுப்பிற்கு..

☯ மேலும், அனிச்சம் பூவானது அவளது மென்மையான பாதத்தில் பட்டால் அது நெருஞ்சி முள் போன்று வருத்தத்தை அளிக்குமாம்.

இவ்வாறு மலர்களை ஒப்பிட்டு தன் தலைவியின் அழகினை பலவாறாக தலைவன் புனைந்துரைக்கின்றான்.

ஆ. மதியினை ஒப்பிட்டு தலைவியின் நலனை புகழ்ந்துரைத்தல்

☯ வானில் தோன்றும் சந்திரனுக்கும் தன் தலைவியின் முகத்திற்கும் வேறுபாடு அறியாமல் நட்சத்திரங்கள் எல்லாம் கலங்கி நிற்கின்றனவாம். அதாவது சந்திரனை போன்ற முகம் தன் தலைவியுடையது என தலைவன் உரைக்கின்றான்.

" மதியும் மடந்தை முகனும் அறியா பதியின் கலங்கிய மீன்..

๏ மேலும், குறைந்த இடமெல்லாம் நிறைவான ஒளிவீசும் இயல்புடைய சந்திரனித்தில் களங்கமானது இருப்பதை போன்று தன் தலைவியின் முகத்தில் எதுவித களங்கமும் இல்லை என தலைவன் கூறுகின்றான்.

" அவிர்மதிக்கு போல மறுவுண்டோ மாதர் முகத்து..

๏ இதுமட்டுமன்றி, தன் தலைவியின் முகத்தை போல் ஒளிவீச முடியுமானால் நீயும் என் காதலுக்கு உரிமை பெறுவாய் என தலைவன் கூறுவதன் ஊடாக தன் தலைவியின் வதனம் சந்திரனைக் காட்டிலும் ஒளிபொருந்தியது என உரைக்கின்றான்.

" மாதர் முகம் போல ஒளிவிட வல்லையேல் காதலை..

๏ மேலும், மலர்போன்ற கண்களை உடைய தன் தலைவியின் முகத்தை நீயும் பெற விரும்பினால் பலர்கானும் படி தோன்றாதிருப்பாயாக என தலைவன் கூறுகின்றான். இதன் வாயிலாக தன் தலைவியின் முக அழகு சந்திரனை காட்டிலும் மிகுதியானது என தலைவன் உரைக்கின்றான்.

" மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்ததாயின் பலர் காணத் தோன்றல்..

இவ்வாறு மதியை ஒப்பிட்டு தன் தலைவியின் அழகு நலன்களை தலைவன் நயந்துரைக்கின்றான்.

✍ வினா இலக்கம் - 07 இன் விடைகள்

அ. பாலுமகேந்திராவின் ஆளுமைகள்

→ தன்னுடைய வேலைகளை எல்லாம் தனி ஒருவராகவே செய்து முடித்திருக்கின்றார்

→ சினிமாப் பட்டறை, திரைப்படத் தயாரிப்பு, இயக்கம் என்பவற்றில் வேறு ஒருவரை நியமிக்காது தான் தனியாகவே இவற்றை செய்து முடித்திருக்கின்றார்.

→ தனது காரியங்களை தானே செய்து முடிக்க வேண்டும் எனும் கொள்கை கொண்டவர்.

→ தான் செய்யும் தொழில் மீது ஈடுபாடும், பிடிப்பும் கொண்டு செயலாற்றியவர்

→ தன் வாழ்வின் இறுதி நாளுக்கு முன் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை முடித்து விட வேண்டும் என்ற உணர்வுடன் செயலாற்றியவர்

ஆ. சினிமாத் துறையில் பாலுமகேந்திரா ஏற்படுத்திய மாற்றங்கள்

→ புதிய சட்டங்களின் மூலமாக அசையும் பிம்பங்களுக்குள் ஒரு கவித்துவத்தை நிகழ்த்தியவர்

→ இயற்கையின் அழகிய கோலங்களை அழியாத கோலங்கள் திரைப்பட புவண்ணம் போல நெஞ்சம்.. பாடலின் ஊடாக எடுத்துக்காட்டி சினிமாவில் புதுமை செய்தவர்

→ ஒளிப்பதிவில் பேக்லைட் (பின்னொளி) எனும் உத்தியை இயற்கை ஒளியில் மிகச் சிறப்பாக கையாண்டவர்.

→ பாமர ரசிகனும் கை தட்டும் அளவிற்கு இவரது ஒளிப்பதிவு இடம்பெற்றுள்ளது. உதாரணம், சில் ஹவுட் ஷாட்டுக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.

→ நாயகன் குறித்த சிவப்பு, கறுப்பு ஆகிய நிற வேற்றுமைகளை எல்லாம் தன் திரைப்படக் கலையின் மூலம் உடைத்தெறிந்தவர்.

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

க. பொ. த சாதாரண தரப் பரீட்சை – 2020
மாதிரி வினாத்தாள் – 02
தமிழ் இலக்கிய நயம் – 48T

பகுதி I

01. I தொடக்கம் 5 வரையான வினாக்களிற்கு சுருக்கமான விடை எழுதுக.

1. ஐய நீ ஆழி வேந்தன் அடிஇணை பிரிகிலாதாய்
எய்தியது என்னை என்றாள்..

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ. ஆழி வேந்தன் எனப்படுபவன் யார்?

2. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்..

அ. அன்னத்தின் தூவி எனப்படுவது யாது?
ஆ. தலைவியின் பாதத்தின் மென்மை எவ்வாறு காட்டப்படுகின்றது?

3. புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில் புத்தகசாலை
வேண்டும் நாட்டில் யாண்டும்..

அ. புத்தகசாலையால் எத்தகு வாழ்வு கிடைக்கின்றது?
ஆ. யாண்டும் என்பதன் கருத்து?

4. வறுமைத் தூரிகை வரைந்த கோலங்கள் முதுமை முகத்தில்
சோகங்களாய் முட்டித் தெறித்தன...

அ. இவ்வடிகளின் ஊடாக யாருடைய தோற்றம் புலப்படுகின்றது?
ஆ. முதுமையான முகத்தில் வெளிப்பட்டு நிற்பவை எவை?

5. பெருங் குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன் வருவோம்..

அ. கோதையர் எனச் சுட்டப்பட்டோர் யார்?
ஆ. இங்கு புலப்படும் அணியினை குறிப்பிட்டு விளக்குக?

✍ வினா இலக்கம் - 01 இன் விடைகள்

I. அ. தாரையால் இலக்குவனுக்கு

ஆ. இராமன்

II. அ. அன்னத்தின் இறகு

ஆ. அனிச்சம் புவும், அன்னத்தின் இறகும் பெண்ணின் பாதத்திற்கு நெருச்சி முள் போன்று வருத்தத்தைக் கொடுக்கும்

III. அ. மனிதர்கள் புனிதமடைந்து புது வாழ்வு பெற உதவுகின்றது
ஆ. எங்கும், எல்லா இடமும்

IV. அ. மைமூன் கிழவி
ஆ. வறுமையின் தூரிகை வரைந்த கோலங்கள் (முகத்தில் சுருக்கம்)

V. அ. மலையக தோட்டத் தொழில் செய்யும் பெண்கள்
ஆ. உவமை – குன்று நிகர்த்த மனவுறுதி

02. கீழ்க்காணும் பாடற் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

வேப்பம் பூ மிதக்கும்
எங்கள் வீட்டுக் கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்திற்கொரு முறை
விசேசமாய் நடக்கும்
ஆழ் நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்

கொட்டாங்குச்சி, கோலி,
கரண்டி, கட்டையோடு உள் விழுந்த
துருப்பிடித்த ராட்டினம்,
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்,
சேற்றிற்குள் கிளறி எடுப்போம் நிறையவே

சேறுடா சேறுடாவென அம்மா அதட்டுவாள்
என்றாலும் சந்தோசம் கலைக்க யாருக்கு மனம் வரும்?

பகை வென்ற வீரனாய்
தலை நீர் சொட்டச் சொட்ட அப்பா வருவார்

இன்று வரை அம்மா
கதவுகளின் பின்னிருந்து தான்
அப்பாவோடு பேசுகின்றாள்

கடைசி வரை அப்பாவும் மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க

i. **தூர் வாரும் உற்சவம் என்பதன் கருத்தினை தெளிவுறுத்துக?**

ii. **தூர் வாரும் போது வெளிவந்த பொருட்கள் யாவை?**

iii. **பாடலில் புலப்படும் உவமையணியை குறிப்பிட்டு விளக்குக?**

iv. **இன்று வரை அம்மா கதவுகளின் பின்னிருந்து தான் அப்பாவோடு பேசுகின்றாள்.. எனும் தொடரில் வெளிப்படும் நயத்தினை குறிப்பிடுக?**

v. **கடைசி வரை அப்பாவும் மறந்தே போனார்**
மனசுக்குள் தூரெடுக்க.. என்பதன் ஊடாக வெளிப்படும் கருத்து யாது?

✍ <u>வினா இலக்கம் - 02 இன் விடைகள்</u>

i. **கிணற்றில் விழுந்த பொருட்களையும், சேறு முதலியவற்றையும் ஆண்டுக்கு ஒரு முறை வெளியில் எடுக்கும் முகமாக கிணற்றினை துப்பரவு செய்வதே தூர் எடுத்தல் எனப்படுகின்றது.**

ii. **கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி, கட்டையோடு கூடிய ராட்டினம், வெள்ளி டம்ளர்**

iii. **பகை வென்ற வீரனைப் போல தலை நீர் சொட்ட சொட்ட அப்பா மேல் வருவார் எனும் அடிகள் உவமையணியின் வெளிப்பாடாகும்.**

உவமானம் – பகை வென்ற வீரன்
உவமேயம் – தலை நீர் சொட்ட வெளிவரும் அப்பா
பொதுத்தன்மை – வெற்றிக்களிப்பு

iv. இவ்வடிகளில் அப்பாவிற்கும், அம்மாவிற்கும் இடையிலான புரிந்துணர்வின்மையினை எடுத்துரைக்கின்றன. அம்மா அப்பாவின் முன்பாக நின்று பேசுவதற்கு அச்சம் கொண்டவராக கதவுகளின் பின் இருந்து தன் மன உணர்வுகளை பேசுகின்றாள் என்பதும் இங்கு புலப்படுகின்றது. இதன் ஊடாக ஓர் பெண் அடிமைத்தனம் புலப்படுகின்றது.

v. அப்பா கிணற்றினுள் இறங்கி அங்கிருந்த அழுக்குகளையும், சேறு முதலியவற்றை வெளியில் எடுத்திருந்தாலும் தன்னுடைய மனதில் உள்ள தீய எண்ணங்களையும், பல்வேறு பட்ட கருத்து வெளிப்பாடுகளையும் அகற்றிக் கொள்ளவில்லை. அதாவது தன் மனைவியை அடக்குமுறைக்கு உட்படுத்துபவராக இங்கு காட்டப்படுகின்றார். இதனாலேயே அம்மா அவர் முன்பாக நின்று கதைத்திட அச்சம் கொண்டவராக கதவுகளின் பின்னிருந்து பேசுகின்றாள் என்பது கூறப்படுகின்றது.

பகுதி II

03. கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

இயற்கையாக மனதில் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதன் மூலம் இரண்டு பயன்கள் கிட்டுகின்றன. முதலாவது யாரை வெறுக்கின்றோமோ அவர் மேல் போர் தொடுத்துச் வெற்றி காண முடிகின்றது. இரண்டாவது அவ்வாறு பெறும் வெற்றியைப் பிறர் புகழவும் காரணமாகின்றது. இவ்வாறு இரண்டு வழிகளிற் பயன் பெறக் கூடுமாயின் வன்மை மிக்க அரசர்கள் போர் என்ற வழியை மேற் கொண்டதில் வியப்பிருத்தல் இயலாது. மேலும் அரசர்கள் புரியும் இந்தப் போர்களைத் தம்முடைய நாட்டு மக்களின் நலத்திற்காகவே செய்ததாகவும் கூறினர். அம்மக்களும் இதனை நம்பினர்.

பிறருடைய நாட்டின் மேல் போர் தொடுத்துச் செல்லுதல் அரசர்க்குரிய அறமாகவும் போற்றிக் கூறப்பட்டது. தற்காப்புச் செய்யுமுறையில் போரிடுதல் அன்றியும், பிறர் மேல் படை கொண்டு வலுப்போருக்குப் போதலும் அறமெனக் கருதப்பட்டது. புகழ் வேட்டையாட பிறருடைய நிலத்தைப் பற்றி கவலை கொள்ளாமல் போரிடுதலை ஒரு வாய்ப்பாக் கொண்டனர் அற்றைத் தமிழர். மேலும் ஓரிரண்டு போர்களில் வெற்றி கண்டுவிட்டால் அது குடிப்பழக்கம் போல் ஆகிவிடும். அவ்வெற்றி தந்த வெறி மேலும் போர் செய்யத் தூண்டி விடும். மாங்குடி மருதனார் என்ற புலவர் தன்னுடைய அரசனுக்கு உண்டான போர் வெறியைத் தணிக்க மதுரைக் காஞ்சி என்றதொரு நூலையே இயற்றினார் என்றால் பழந்தமிழர் போர் வெறி என்ற பாலைவனத்தில் இது ஒரு நீர் ஊற்றுப் போன்று காணப்படுகின்றது.

i. இயற்கையாக மனதில் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கு வடிவம் கொடுப்பதால் கிடைக்கும் பயன்கள் எவை?

ii.. அரசர்க்குரிய அறமாக கருதப்பட்டது யாதென உரைப்பகுதியில் புலப்படுகின்றது?

iii.. உரைப்பகுதியில் வெளிப்படும் இலக்கியம் ஒன்றைக் குறிப்பிட்டு அதன் ஆசிரியரையும் குறிப்பிடுக?

iv. அற்றை நாள் தமிழர் குறித்து உரைப்பகுதியில் கூறப்படும் கருத்து யாது?

v. அரசர்கள் தாம் போர் செய்தமைக்காக கூறும் காரணம் யாது?

✍ வினா இலக்கம் - 03 இன் விடைகள்

i. இரண்டு பயன்கள் கிடைக்கின்றது. ஒன்று யாரை வெறுக்கின்றோமோ அவர் மீது போர் தொடுத்துச் வெற்றி காணுதல் மற்றையது, அவ்வாறு பெறும் வெற்றியை பிறர் புகழவும் காரணமாக அமைகின்றது.

ii. பிறருடைய நாட்டின் மேல் போர் தொடுத்துச் செல்லுதல், தற்காப்புச் செய்யுமுறையில் போரிடுதல், பிறர் மேல் படை கொண்டு வலுப்போருக்கு போதல் என்பன அறமாகக் கொள்ளப்பட்டன.

iii. **மதுரைக்காஞ்சி – மாங்குடி மருதனார்**

iv. **புகழ் வேட்டையாட பிறருடைய நிலத்தைப் பற்றி கவலை கொள்ளாமல் போரிடுதலை ஒரு வாய்ப்பாக கொண்டனர் அற்றைத் தமிழர்**

v. **தம் நாட்டு மக்களின் நலத்திற்காகவே போரினை செய்ததாகக் கூறினர்.**

பகுதி III

❁ எவையெனும் விரும்பிய இரண்டு வினாக்களிற்கு விடை எழுதுக

04. பத்தி எழுத்து, மரம் என்பது உயர்திணை எனும் பகுதியில்,

அ. மரம் என்பது உயர்திணை என்பதை வலியுறுத்த ஆசிரியர் கையாண்ட உத்திகள்
ஆ. மரத்திற்கும், மனிதனுக்கும் இடையிலான வேறுபாடு

05. தாய்ப்பசு சிறுகதையில்,
அ. தாய்ப் பசுவின் தாய்மை உணர்வு புலப்படும் தன்மை
ஆ. ஜீவகாருண்யத்தின் அவசியம்
என்பன குறித்து கருத்துரைக்குக

06. வஞ்சியர் காண்டம் நாடகப்பகுதியில்,
அ. மாதவி குறித்த கண்ணகியின் மனப்பதிவு
ஆ. கண்ணகியின் குணப்பண்புகள்
என்பன குறித்து தெளிவுறுத்துக.

07. விவேகசிந்தாமணி பாடல் பகுதியில், பெண்களிள் அழகினை நாகரீமான முறையில் வர்ணிக்கும் தன்மைகளை உதாரணங்களுடன் எடுத்துரைக்க.

பகுதி III விடைகள்

✍ வினா இலக்கம் 04 இன் விடைகள்

அ. மரம் என்பது உயர்திணை என்பதை கூறிட பத்தியாசிரியர் கையாண்ட உத்திகள்

→ தானே கதை சொல்லியாக இடம்பெற்றிருத்தல்

→ சிறிய சிறிய வசனங்களைக் கொண்டதாக இடம்பெற்றிருத்தல்

→ வாசகர்களை நோக்கி வினாக்களை தொடுத்து பின் அதற்கு பதில் கூறுவதாய் அமைதல்

→ பல ஆதாரங்களை முன்வைத்திருத்தல்

→மனித வாழ்வில் மரம் பெறும் முக்கியத்துவத்தை ஆதாரத்துடன் கூறியிருத்தல்.

→ மரம் இன்றி மனிதால் வாழ முடியாது என்பதை எடுத்துரைத்தல்

→ மரம் என்பது ஒவ்வொரு இடத்திலும் பெறும் முக்கியத்துவங்களை காட்டியிருத்தல்

→ நகைச் சுவை சார்ந்தாக கருத்துக்களை முன்வைத்திருத்தல்

→ தர்க்க ரீதியான பல கருத்துக்களை முன்வைத்திருத்தல்

ஆ. மரத்திற்கும், மனிதனுக்கும் இடையிலான வேறுபாடு

→ மனிதனுக்கு மண் புதைகுழி, மரத்திற்கோ கருவறை

→ மண்ணின் மைந்தன் மனிதன் அல்லன், மரமே மண்ணின் மைந்தன்

→ பிறந்த இடத்தில் பற்று வைத்து வரவு வைப்பவை மரங்கள், பிறந்த இடத்தில் செலவு வைப்பவன் மனிதன்

→ மரம் சாய்ந்தால்காட்டிலிருந்து வீட்டுற்கு வரும், மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டிற்கு செல்வான்

→ மரம் புழுதியில் மலர்களையும், கழுநீரில்கனிகளையும் தருகின்றது. மனிதனோ மலர்களில் புழுதியையும், கனிகளில் கழுநீரையும் செய்கின்றான்.

→ மரம் எல்லாம் கொடுப்பதற்காக கைகளை நீட்டுகின்றன. மனிதனோ வாங்குவதற்காக கைகளை நீட்டுகின்றான்

→ மரம் வானத்தை நோக்கி வளர்கின்றது, மனிதன் புழுதியில் புரழுகின்றான்

→ மரங்களில் எல்லாம் கொடுக்கின்ற சிபிகள், சீதக்காதிகள் ஆனால் மனிதரில் ஒரேயொரு சிபி ஒரேயொரு சீதக்காதி.

✍ வினா இலக்கம் 05 இன் விடைகள்

அ. பசுவின் தாய்மை உணர்வு வெளிப்படும் தன்மைகள்

→ கன்றுக் குட்டியும், குமரனும் அருகே வரும் போது தாய்மை உணர்வு பொங்கிட இருவரையும் மாறி மாறி நாக்கால் தடவியமை.

→ காளை மாடு குமரனை தாக்க முற்படுகையில் அதன் குறுக்கே சென்று குமரனும் என் பால் குடித்து வளர்ந்தவன் அவனும் என் மகன் தானே எனக் கூறுதல்

→ தன் கன்று பசியோடு இருக்கும் நிலை கண்டு தாய்ப் பசு வேதனை கொள்ளுதல்

→ தன் கன்று அருகில் இல்லாத போது தாய்ப்பசுவின் மடியில் பால் சுரந்தது, அதன் கண்களில் நீரும் வழிகின்றது இது பசுவின் தாய்மையின் வெளிப்பாடாகும்.

→ பசுவானது தன் எதிரில் வைக்கப்பட்ட பொங்கலை முதலில் முகர்ந்து பார்த்து கண்ணீர் விட்டது,பின் தன் கொம்புகளால்அப் பாத்திரத்தை மோதித் தள்ளியது இதுவும் தாய்மை உணர்வின் வெளிப்பாடாகும்.

ஆ. ஜீவகாருண்யத்தின் அவசியம்

ஜீவகாருண்யம் என்பது உயிர்கள் மீது அன்பும், இரக்கமும் கொள்வதாகும். மனிதன் தன்னைக் காட்டிலும் குறைந்த அறிவு படைத்த பிற உயிர்கள் மீது கருணை கொண்டு அவற்றை பாதுகாப்பதே ஜீவகாருண்யமாகும். இச் சிறுகதையில் தாய்ப்பசுவின் தாய்மை உணர்வும், அதன் செயல்களும் மனிதரைக் காட்டிலும் மேலுயர்ந்ததாக அமைகின்றது. ஆனால் மனிதனாகிய மாடசாமியே தாய்ப்பசுவின் கன்றினை வருத்தி அதன் மரணத்திற்கு காரணமாக அமைகின்றான். ஆனாலும் மாடசாமியின் மகனை கொன்று பழி தீர்த்துக் கொள்ள முற்பட்ட காளை மாட்டினைக் கூட தாய்ப்பசு தடுத்து நிறுத்துகின்றது. ஆக உயிரினங்கள் மீது நாமும் இரக்கம் கொண்டு அவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை இச் சிறுகதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

✍ வினா இலக்கம் 06 இன் விடைகள்

அ. மாதவி குறித்த கண்ணகியின் மனப்பதிவு

→ மாதவி மீது கண்ணகி பொறாமையே, கோபமோ கொண்டதில்லை. மாறாக அவள் மீது மிகுந்த மதிப்பினையே கொண்டிருந்தாள்.

→ மாதவியிடம் குடிகொண்ட திறமைகள் தன்னிடம் இல்லையே என ஆதங்கம் கொண்டவள் கண்ணகி.

→ சொற்களைக் கொண்டு சரம் தொடுக்கத் தெரிந்த வித்தகி மாதவி எனப் புகழ்ந்தவள்

→ கேசிகன் கொண்டு வந்த மாதவியின் மடலைக் கண்டு அவள் மீது பெரு மதிப்பினைக் கொண்டாள் கண்ணகி

→ மாதவி கணிகையர் குலத்தில் பிறந்திருந்தாலும் கவுந்தியடிகள் போல மெத்தப் படித்தவள் எனக் கூறியவள்

→ அறநூல்களை பலவற்றை நன்கு கற்றவள் மாதவி எனக் கூறியவள் கண்ணகி

ஆ. கண்ணகியின் குணப்பண்புகள்

→ குணகடல் செல்வி
→ குடவாயில் கோட்டத்து தெய்வமாக விளங்கியவள்
→ ஒரு முலை பியத்தெறிந்து ஊனமாய் நின்று மதுரை திருநகர் தீயிட்ட தேவி
→ அரசதிகாரத்தின் அநீதி சிதற சிலம்பறைந்து முழங்கிய கோதை
→ சிலம்பின் வென்ற சேயிழை
→ மாதவியின் திறமை கண்டு அவள் மீது மதிப்புக் கொண்டவள்
→ மாதவியின் மீது கோபம் கொள்ளாது அவள் திறமைகளை புகழ்ந்துரைத்தவள்
→ கோவேந்தரை சிலம்பால் வென்றவள்
→ தன் கணவன் நிலை கண்டு அவனுக்கு தன் சிலம்பினை கழற்றிக் கொடுத்தவள்

✍ வினா இலக்கம் 07 இன் விடைகள்

அ. பெண்களின் அழகு வர்ணிக்கப்படும் தன்மை

→ தேன் நுகர் வண்டு மது தனை உண்டு.. பாடலில்.

பூக்களில் தேனை உண்டு மயங்கிக் கிடந்தது ஓர் வண்டு. அதைக் கண்ட அழகு படைத்த பெண் ஒருத்தி அதை நாவற்பழம் என கருதி அதைத் தன் நீண்ட கையில் எடுத்துப் பார்த்தாள். அப்போது அம் மங்கையின் முகத்தின் அழகினைக் கண்ட வண்டு அது வானில் உலாவரும் சந்திரனைப் போல் உள்ளதைக் கண்டு அவளது தாமரை மலராகிய கை குவிந்து மூடிக்கொள்ளும் என எண்ணி பயந்து அவ் வண்டானது பறந்து போனது. மங்கையின் கையாகிய தாமரை மலர் மூடிக் கொண்டால் தான் அதற்குள் அகப்பட்டு இறந்து விடுவேன் எனக் கருதிய வண்டு பறந்து போனது என்பதும் கவிஞரின் கற்பனையே. மேலும், அவ்வாறு பறந்தது வண்டோ, அல்லது பழமோ என மங்கையானவள் மயங்கி நின்றாளாம். ஆக தலைவியின் முகத்தை நிலவெனவும், அவளது கையை தாமரை மலர் எனவும் வர்ணித்துள்ளார் கவிஞர்.

→ தண்டு உலாவிய தாமரைப் பொய்கையில்.. பாடலில்.

பெண் ஒருத்தி தாமரைக் குளம் ஒன்றில் நீரினை ஏந்தி தன் முகத்தின் அருகே கொண்டு வந்து பார்த்தாள். அதில் தெரிந்த தன் கண்களின் நிழலைப் பார்த்து கெண்டை மீன், கெண்டை மீன் எனக் கூறி கரை ஏகினாள்.



LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium
தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

அதாவது, மங்கையின் கண்கள் கெண்டை மீன் போன்றனவாம். கெண்டை மீன் என்பது நீர் நிலையில் காணப்படும் ஒரு வகை மீனாகும். அம் மீன் மங்கையின் கண்களுக்கு உவமிக்கப்பட்டுள்ளது. மங்கை தன் கண்களின் விம்பத்தை/நிழலை நீரில் கண்டு அதனை உண்மையில் கெண்டை மீன் எனக் கருதி கரையேறினாள் என கவிஞர் மங்கையின் கண் அழகினை கற்பனை நயத்துடன் வர்ணிக்கின்றார்.

→ அலகு வாள்விழி ஆயிழை நன்னுதல்...பாடலில்.

இப்பாடலில் மங்கையின் கண் அழகு இருவிதமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. கூர்மையான வாளைப் போன்ற விழிகளை உடையவள் என்பது முதலாவதாகும். இரண்டாவது, மங்கையின் அக் கண்கள் கலகத்தை அதாவது குழப்பத்தை விளைவிக்கக்கூடிய கண்கள் எனக் கருதிய காமதேவனாம் மன்மதன் தன் மலரம்புகள் ஐந்தையும் அவள் முன் வைத்து வணங்கினான். அதாவது, மங்கையின் கண்களைக் கண்டு மன்மதனே இக் கண்கள் கலகத்தை செய்யக் கூடியன எனக் கருதி தன் கரும்பு வில்லையும், மலரம்புகளையும் அவள் முன் வைத்து வணங்கினான் எனக் கவிஞர் கூறுவது அதீத கற்பனையாகும்.

க. பொ. த சாதாரண தரப் பரீட்சை – 2020
மாதிரி வினாத்தாள் – 03
தமிழ் இலக்கிய நயம் – 48T

பகுதி I

01. I தொடக்கம் 5 வரையான வினாக்களிற்கு சுருக்கமான விடை எழுதுக.

1. இன்றைக்கு இரவைக்குப் பாருங்கள் முசுப்பாத்தியை..

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ. முசுப்பாத்தி என்பது குறிக்கும் நியம வழக்கு யாது?

2. மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக் கைத்தலம் பற்றக்
கனாக் கண்டேன் தோழி நான்..

அ. கைத்தலம் பற்றுதல் என்பதன் கருத்து யாது?
ஆ. இக் கூற்று இடம்பெறும் பாடலைப் பாடியவர் யார்?

3. அவள் கணிகையர் குலத்தில் பிறந்தாலும் மாதவம் செய்யத கவுந்தி அடிகளைப் போல் மெத்தப்படித்தவள்..

அ. இங்கு அவள் எனப்படுபவள் யார்?
ஆ. இக் கூற்றினை கூறியது யார்?

4. அழகான ஒரு சோடிக் கண்கள் அவை அம்புகள் பாய்ச்சி
என் உளமெல்லாம் புண்கள்..

அ. இப் பாடலைப் பாடியவர் யார்?
ஆ. உள்ளம் புண் பட்டமைக்கான காரணம் யாது?

5. தாமரை வதனம் சாய்த்து
தனு நெடுந் தரையில் ஊன்றி..

அ. தனு என்பது இங்கு எதனைக் குறிக்கின்றது?
ஆ. தாமரை வதனம் என்பதில் பயின்றுள்ள அணியினை இனங்காண்க?

✍ வினா இலக்கம் 01 இன் விடைகள்

I. **அ. லோரன்ஸ்சால் வீட்டுக்காரனுக்கு**
ஆ. வேடிக்கை, நகைச்சுவை

II. **அ. திருமணம் செய்தல்**
ஆ. ஆண்டாள்

III. **அ. மாதவி**
ஆ. கண்ணகி

IV. **அ. பாவலர் பஸில் காரியப்பர்**
ஆ. அழகான ஒரு சோடிக் கண்களின் பார்வை, தாக்கம்

V. **அ. வில்**
ஆ. உவமையணி

02. கீழ்க்காணும் பாடற் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி

நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி

மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி

மிளகுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மிளகு மலைநாடும் கண்டீரோ தம்பி

உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி

இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
இஞ்சி மலைநாடும் கண்டீரோ தம்பி

உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உப்பு மலைநாடும் கண்டீரோ தம்பி

காசுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
காசு மலைநாடும் கண்டீரோ தம்பி

வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி
வேந்தர் மணி முடியும் கண்டீரோ தம்பி

கோச்சி வாழ கொப்பர் வாழ
பேத்தி வாழ பேரன் வாழ

www.ikedu.lk

பூட்டி வாழ பூட்டன் வாழ
கொம்மான் வாழ மாமி வாழ

குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ
பெரியாச்சி வாழ பெரியப்பு வாழ

ஊர் வாழ தேசம் வாழ
குருவுக்கும் சிவனுக்கும்
நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க

i. **குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என மருத்துவிச்சி வாழ்த்துகின்றாள்?**

ii. **மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?**

iii. **பாடலில் கிராமிய மண் வாசணை வெளிப்படுமாற்றினை எடுத்துரைக்க?**

iv. **குருவுக்கும் சிவனுக்கும் நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க.. எனும் அடிகள் உணர்த்தும் கருத்து யாது?**

v. **பிரசவம் பார்க்கின்ற மருத்துவிச்சிக்கு வழங்கப்பட்ட பொருட்களாக பாடலில் காட்டப்படுபவை எவை?**

✍ வினா இலக்கம் 02 இன் விடைகள்

i. **குழந்தை உறவினர்களும், அயலவர்களும் கூடியிருக்க உணவிற்கு குறைவின்றி கல்வி கற்றுக் கொடுக்கும் குருவுக்கும், இறைவனுக்கும் நல்ல பிள்ளையாக இருந்த வாழ வேண்டும் எனவும், மன்னர்க்கு மன்னராக இருந்திட வேணடும் எனவும் மருத்துவிச்சி வாழ்த்துகின்றாள்**

ii. **குழந்தை பிறந்தமையால் குழந்தையின் தாய், தந்தையர் மற்றும் உறவினர்கள், அயலவர்கள் என அனைவரும் வாழ வேண்டும் என வாழ்த்திப் பாடுதல். மேலும் குழந்தை ஊரும், தேசமும் புகழ வாழ வேண்டும் எனவும், அக் குழந்தை குருவுக்கும், இறைவனுக்கும் நல்ல பிள்ளையாக இருந்து வளர வேண்டும் எனவும் மருத்துவிச்சி வ ாழ்த்துவதன் ஊடாக அவளது பரந்த மனப்பாங்கு புலப்படுகின்றது.**

iii. **→ கிராமத்தில் வாழும் அனைவரும் ஒற்றுமையுடனும் வீட்டுக்கொடுப்புடனும் வாழுதல்**
→ பிறர் நன்கு வாழ வேண்டும் எனும் பரந்த மனப்பாங்கு காணப்படுதல்
→ குடும்ப உறவுப் பிணைப்பும், உறவு முறை கூறி அழைக்கின்ற மரபும் காணப்படுதல்
→ பிரசவம் பார்க்கும் மருத்துவிச்சி குழந்தையை வாழ்த்திப் பாடுதல்
→ பிரசவம் பார்க்கும் மருத்துவிச்சிக்கு உபகாரப் பொருட்களை கொடுத்தல்
→ இறைவனையும், குருவையும் மதிக்கின்ற உயரிய மனப்பாங்கினை கொண்டிருத்தல்
→ கிராமத்தில் விளைகின்ற உணவுப் பொருட்களை எடுத்துக்கூறுதல்

iv. **கல்வி கற்றுக் கொடுக்கின்ற குருவுக்கும், அனைத்தையும் காக்கின்ற அருள் தரும் இறைவனுக்கும் நல்ல பிள்ளையாக இருந்து வாழ வேண்டும் எனக் கூறப்படுகின்றது. ஆக குருவுக்கும், இறைவனுக்கும் எப்போதும் மதிப்புக் கொடுத்து குழந்தை வாழ வேண்டும் எனும் கருத்து கூறப்படுகின்றது.**

v. **அரிசி, உப்பு, மிளகு, நெல், உள்ளி, மஞ்சள், இஞ்சி, காசு**

பகுதி -II

03. கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுகின்றது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ அங்கே உரிமைப் போராட்டம் இல்லை, கடமைக் குறைவு இல்லை. அதனால் அன்பின் வழியது உயிர்நிலை என்கின்றார் திருவள்ளுவர். அன்பு இல்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் உள்ள பட்டமரம் போன்றது என்றும் கூறுகின்றார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்ய வேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இல் வாழ்க்கையை ஓர் அறம் என்று சிறப்பித்து இல்லறம் என்றார்கள். மக்கட் பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவற்றை அதன் அங்கம் ஆக்கினார்கள். தேசபக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்று பெரிய குடும்பத்தைப் போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். சமயம் அல்லது கடவுள் நெறி என்பதும், உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும்.

ஆனால் குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு தந்தையோ மக்களோ தன்னலம் உடையவர்களாய்த் தீமை செய்வார்களானால் என்ன ஆகும்? அப்படித்தான் நாட்டில் ஒரு சாராரின் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றொரு தன்னலமாக வாழ்வார்களானால் அன்பு வரண்டு போகும் உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.

i. **அன்பு எனப்படுவது யாது எனக் கூறப்படுகின்றது?**

ii. **அன்பு இல்லாத வாழ்க்கையை வள்ளுவர் எதற்கு உவமை செய்கின்றார்?**

iii. **இல்லறத்தின் அங்கங்களாக கூறப்படுபவை எவை?**

iv. **சமயம் அல்லது கடவுள் நெறி ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணம் யாது?**

v. **உரிமைக்கும் கடமைக்கும் இடையில் போராட்டம் ஏற்படக் காரணம் யாது?**

✍ வினா இலக்கம் 03 இன் விடைகள்

i. **உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுகின்றது.**

ii. **அன்பு இல்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் உள்ள பட்டமரம் போன்றது என்கின்றார் வள்ளுவர். அதாவது அன்பு இல்லாத வாழ்க்கை பாலை நிலம் போன்று செழிப்பில்லாது வரண்டு காணப்படும் என்கின்றார் வள்ளுவர்.**

iii. **மக்கட் பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவை இல்லறத்தின் அங்கங்களாகும்**

iv. **உலகத்தில் வாழும் அனைவரிடமும் அன்பு செலுத்தி உலகத்தையே கடவுளின் குடும்பம் எனக் கருதுகின்ற பரந்த மனப்பாங்கினை வளர்ப்பதற்கு சமயம் அல்லது கடவுள் நெறி என்பது உருவாக்கப்பட்டுள்ளது எனலாம்.**

v. **யாவர் அன்பினைத் தவறாக பயன்படுத்தி தன்னலமாக வாழ்வார்களோ அங்கு உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படுகின்றது.**

பகுதி -III

❁ ஏவையெனும் விரும்பிய இரண்டு வினாக்களிற்கு விடை எழுதுக

04. எலியம் சிறுகதையில் வெளிப்படும் அங்கதச் சுவை (நகைச்சுவை) குறித்து விபரிக்குக?

05. புத்தகசாலை கவிதையில்,

அ. கவிஞர் காண விழையும் நூலகம்
ஆ. புத்தக சாலை எங்கும் வேண்டும் என்பதன் காரணம்

06. கிஷ்கிந்தைப் படலத்தில்,

அ. இலக்குவனனை வழிமறிக்கும் வானர மகளிர் பற்றிய வர்ணிப்பு
ஆ. தாரையின் குணப்பண்புகள்

07. பாரதியாரின் யேசு கிறிஸ்து பகுதியில்,

அ. யேசு கிறிஸ்து

ஆ. மரிய மக்தலேனா

ஆகியோரின் சிறப்புக்கள் புலப்படுமாற்றினை எடுத்துரைக்குக

✍ வினா இலக்கம் 04 இன் விடைகள்

எலியம் எனும் சிறுகதையில் வெளிப்படும் அங்கதச் சுவை

→ எலிகளைப் பிடிக்காத ஒருவன் தன்னுடைய உயிரியல் பயிற்சிக்காக எலிகளை வெட்டி ஆராயும் முறை எனக் கூறுவது நகைச்சுவை உணர்வாக அமைகின்றது.

→ தான் வாங்கி வைத்த புதிய மணச் சவர்க்காரத்தை எலியானது தன் மனைவி எலிசாவுக்கு கொடுப்பதற்காக திருடிக் கொண்டு போய்விட்டது எனக் கூறுதல்

→ கதையில் வரும் நபர் கட்டிலில் இருக்கும் போது எலி ஒன்று தொப்பென்று விழுந்து அவன் கால்களின் வழியாக கடக்க முற்படுகையில் அவன் கால்களை உதறி கட்டிலின் மேல் ஏறி துள்ளிக் குதிக்க கட்டிலின் குறுக்குப் பலகை முறிகின்றது. தச்சன் கட்டிலை படுப்பதற்கு மட்டுமன்றி இவ்விதமாக துள்ளிக் குதிப்பதற்கும் கட்டிலை செய்திருக்கலாம் எள ஆசிரியர் அங்கதச் சுவை பட கூறுகின்றார்

→ எலிப் பொறியில் வைத்த கருவாட்டுத் துண்டினை எலிகள் உண்ணவில்லை என்பதைக் கண்டதும் எலிகள் எல்லாம் சைவத்திற்கு மாறிவிட்டனவா? என கதையாசிரியர் எண்ணிக் கொள்வது நகைச்சுவை உணர்வினை ஊட்டுகின்றது.

→ வீட்டு வளவின் மூலையில் குப்புறக் கிடந்த கார் பற்றிக் கூறுவதும் ஓர் அங்கதச் சுவையாகும். இந்த நாடு இறக்குமதி செய்த முதல் நூறு கார்களில் இதுவும் ஒன்றாக இருந்திருக்கலாம் எனக் கூறுதல்

→ எலிப் பொறியில் அகப்பட்டு இறந்து போன எலியைக் கண்டதும் மகிழ்ச்சியடைவதும் நகைச்சுவை உணர்வின் வெளிப்பாடேயாகும். இறந்த எலிகளைக் கண்டு, சண்டையிடும் நாய்களின் வாய் பிளந்து மேலுதடு விரிந்து பற்கள் தெரியும் தோற்றம் எனக் கூறுதல்.

→ கதையாசிரியரின் விருப்பத்துக்குரிய சட்டை ஒன்றை எலி குதறி விட்டுப் போனதும் வரைபடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியா கண்டத்தை ஞாபகப்படுத்தும் வகையில் சட்டையின் கிழிசல் இருந்தது எனக் கூறுவதும் ஓர் எள்ளல் சுவையாகும்.

www.ikedu.lk

→ எலிகளை அழிப்பதற்கு பூனை ஒன்றை வளர்ப்பதும் அதற்கு ஆங்கிலத்தில் பெயர் வைத்ததும் அதற்கான காரணமாக தமிழ்ப் பெயர்கள் ஏனோ சொல்லப் பிராணிகளுக்கு பொருந்துவதில்லை எனக் கூறுவதும் அங்கதச் சுவையாகும்

→ கறிச்சட்டியில் இருந்த கறி முழுவதையும் பூனை காலி செய்து விட்டு திருப்தியுடன் இவனை நிமிர்ந்து பார்த்து மியாவ் எனக் கத்தியதும், கோபத்துடன் இவன் பூனையை அடித்து துரத்துவதும் என இவையும் அங்கதச் சுவையின் வெளிப்பாடேயாகும்.

✍ வினா இலக்கம் 05 இன் விடைகள்

அ. கவிஞர் காண விளைகின்ற புத்தகசாலை

→ தமிழ்ர்க்கு என தமிழ் மொழியில் தனியாக புத்தகசாலை அமைந்திருக்க வேண்டும்.

→ அங்கு பிறமொழி நூல்கள் எல்லாம் மொழிபெயர்த்து அமைந்திருத்தல் வேண்டும்

→ கவிதை நூல்கள், உரைநடை நூல்கள் என்பன துறை துறையாக அடுக்கபட்டிருக்க வேண்டும்.

→ அழகிய செய்தித்தாள்கள் பலவும் குவிந்திருக்க வேண்டும்.

→ விரும்பும் நூல்கள், புதிய நூல்கள் என பலவகையான புத்தகங்களும் அடுக்கி வைத்திருத்தல் வேண்டும்

ஆ. புத்தகசாலை எங்கும் வேண்டும் எனக் கூறுவதன் காரணங்கள்

→ மனிதர்கள் அன்பு நெறி காண்பதற்கும்,
→ மனிதரது மனோபாவம் வீரிவடைவதற்கும்,
→ எம்மிடம் உள்ள சுயநலம் எனும் இருள் அகலவும்,
→ சகல மக்களும் ஒன்றென உணர்வதற்கும்,
→ எம்மிடையே உயர் எண்ணங்கள் வழங்கிடவும்
→ மக்கள் தாய்மையடைந்து புது வாழ்வு வேண்டுவதற்கும்

✍ வினா இலக்கம் 06 இன் விடைகள்

அ. வானர மகளிர் இலக்குவனனை வழிமறிக்கும் வர்ணிப்பு

→ தாழ்ந்து தொங்கும் கூந்தலை உடைய தனது தோழியருடன் தாரை இலக்குவனன் வரும் வழியை மறித்து நின்றாள். அவ்வாறு நின்ற வானர மகளிர்,

→ மென்மையான இயல்பினையும், வெண்மையான பற்களையும், வெண்மையான வளையல்களையும், மிகச் சிறிய இடையினையும், உயர்ந்த இளமையான மென்மையான தனங்களையும், கொண்டவர்களாக நற்குடியில் பிறந்த மயில் போன்ற சாயலை உடையவர்களாக இலக்குவனனை தடுத்து நின்றனர்.

→ மேலும், அவ்வாறு நின்ற வானர மகளிர், அணிந்திருந்த ஆபரணங்கள் விற்படை, வாட்படை போன்று நன்கு ஒளிக்கதிர்களை வீச கால்களில் அணிந்துள்ள சிலம்புப் பரல்கள் மென்மையாள ஓசையை இசைக்க, மேகலை எனும் இடையணி பறை போன்று முழக்கம் செய்ய, புருவங்கள் கொடிகளை போல் செறிந்து விளங்க அம் மகளிர் கூட்டம் இலக்குவனனை சூழ்ந்து கொண்டது.

→ இது மட்டுமன்றி, ஆரவாரம் செய்கின்ற பேரிகை போன்ற காற்சிலம்பு ஒலிக்க, வேல் போன்ற கண்களையும், வில் போன்ற புருவங்களையும் கொண்டவர்களாகி அவர்களின் அல்குல் பெரிய தேர் போல சுற்றி மேவும் படியாக இலக்குவனனை நெருங்கி அவனை வழிமறித்தனர்.

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

ஆ. தாரையின் குணப்பண்புகள்

→ வானர மகளிரில் முதன்மையானவள், சிறப்புடையவள்
→ அனுமனின் அறிவுரைக்கு ஏற்ப செயலாற்றியவள்
→ வானர வீரர்களின் நலனில் அக்கறை கொண்டவள்.
→ தன் உறுதியான கொள்கையிலிருந்து பின்வாங்காத பெருமை உடையவள்
→ இலக்குவன் கோபம் கண்டு நடுக்கமடைந்து பின் பேசத் தொடங்கியவள்
→ பூமியில் தெய்வப்பெண் போன்று விளங்குபவள்
→ அழகிய தோளும், தூய மனமும், நீண்ட கூந்தலும், நீண்ட கண்களும் உடையவள்
→ இசையிலும் இனிய சொற்களையுடையவள்
→ தன் கணவன் இறந்தமையினால் திருமங்கல கயிறு முதலிய பிற ஆபரணங்களை நீக்கியவள், மலர்மாலை தரியாதவள், மேனியில் வாசனைக் குழம்புகளை பூசாதவள்.
→ இலக்குவனன் கோபத்தை தன் இனிமையும், தந்திரமுமான பேச்சாற்றல் மூலம் குறைத்தவள்

✍ வினா இலக்கம் 07 இன் விடைகள்

அ. யேசுவின் சிறப்புக்கள்

→ ஈசனாக விளங்குபவர்
→ மக்களுக்காக மண்ணில் தோன்றியவர்
→ சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தவர்
→ அனைவருக்கும் உயிர் போன்றவராக விளங்குபவர்
→ வண்மை பேருயிர் யேசுபிரான்
→ அனைவராலும போற்றுதற்குரியவர்
→ அகந்தை இல்லாதவர்களின் உள்ளத்தில் வீற்றிருப்பவர்

ஆ. மரியமக்தலேனாவின் பண்புகள்

→ யேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த காட்சியை நேரடியாக கண்டவள்
→ நேசத்துக்குரியவள்
→ அன்பு நிறைந்தவள்
→ அன்பு பொழிந்த முகம் படைத்தவள்
→ யேசுவின் மீது பக்தி கொண்டவள்
→ பெண்மைக்குரிய குணங்களை கொண்டவள்
→ யேசுவை நல்அறமாக பேணியவள்

✷ ✷ ✷ ✷ ✷

மாணவர்கள் கவனத்திற்கு,

இக் கையேட்டில் தரப்பட்டுள்ள வினாப்பத்திரங்களில் உள்ள பகுதி III கட்டமைப்பு வினாக்களிற்குரிய விடைகள் தங்களது கற்றலுக்கு இலகுவாக சுருக்கமான முறையில் தனித்தனி கூற்றுக்களாக தரப்பட்டுள்ளன. ஆனால் பரீட்சையில் நீங்கள் பகுதி III கட்டமைப்பு வினாக்களிற்கு விடையளிக்கும் போது பந்தி அமைப்பில் விடையளிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

www.ikedu.lk